© [සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ජාතික අධ්‍යාපන ආයතනය
විභාග දෙපාර්තමේන්තුව
தேசிய கல்வி நிறுவகம்
பரீட்சைகள் துறை
NATIONAL INSTITUTE OF EDUCATION
DEPARTMENT OF EXAMINATIONS
கல்வி இளமாணிப்பட்டம் (சிறப்பு) 2022/2025
முதலாம் மட்டம் பருவம் I பரீட்சை - 2024

# BDD152 மொழிக்கான அறிமுகம்
# Introduction to Language

மூல வகை வினாப்பத்திரம் காலம் : மூன்று மணித்தியாலங்கள்

*அறிவுறுத்தல்கள்:-*

- பகுதி I இன் **எல்லா** வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.
- பகுதி II இன் **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
- பகுதி II இன் விடைத்தாளுடன் பகுதி I விடைத்தாளை இணைத்து ஒப்படைக்குக.
- பகுதி II இன் ஒவ்வொரு வினாவுக்கும் புதியதொரு பக்கத்தில் தொடங்கி விடை எழுதுக.
- தெளிவான கையெழுத்தில் எழுதுக.

---

## பகுதி I

**சுட்டிலக்கம் : ………..…………..**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

01. மொழியில் இரட்டை வழக்கு என்பது குறித்த ஒரு மொழிச் சமுதாயத்தினுள் ஒரே சமயத்தில் இரண்டு வகையான மொழி வழக்குகள் பயன்பாட்டில் இருப்பதைக் குறிக்கின்றது. அந்த வகையில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகப் பேசும் ஒருவர் இரட்டை வழக்குத் தொடர்பாக அறிந்திருப்பது அவசியமாகும்.

(i) இரட்டை வழக்கில் காணப்படும் **இரண்டு** வகையான மொழிகளையும் குறிப்பிடுக.

1. .............................................................................................................

2. .............................................................................................................

(02 புள்ளிகள்)

(ii) மொழிப்பாவனையில் மேலே (i) இல் குறிப்பிட்ட இரட்டை வழக்கு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டினை** வெவ்வேறாகக் குறிப்பிடுக.

1. .............................................................................................................

2. .............................................................................................................

(02 புள்ளிகள்)

(iii) இரண்டாம் மொழி ஆசிரியர் என்ற வகையில் மேலே (i) இல் குறிப்பிட்ட இரட்டை மொழி வழக்குகளை மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய கற்றல் கற்பித்தல் செயற்பாடு **ஒன்று** வீதம் தருக.

1. .............................................................................................................

(01 புள்ளி)

02. இரண்டாம் மொழி ஆசிரியர் பிரதேச வழக்குகள் அல்லது கிளைமொழிகள் தொடர்பான சிறந்த அறிவைப் பெற்றிருப்பதால் வெவ்வேறு பிரதேச மாணவர்க்கு அவர்களின் மொழிப்பாவனையை அறிந்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நகர்த்தக்கூடிய வகையில் செயற்பட முடியும்.

(i) தமிழில் வெவ்வேறு பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் பிரதேச மொழிச் சொற்கள் **நான்கினை** அவைகள் பயன்படுத்தப்படும் பிரதேசங்களைக் குறிப்பிட்டு எழுதுக.

| **சொல்** | **பிரதேசம்** |
|---|---|
| 1. .................................................................. | ........................................................................................ |
| 2. .................................................................. | ........................................................................................ |
| 3. .................................................................. | ........................................................................................ |
| 4. .................................................................. | ........................................................................................ |

(04 புள்ளிகள்)

(ii) கிளைமொழி தொடர்பான அறிவு இரண்டாம் மொழி ஆசிரியருக்கு ஏன் அவசியம் என்பதனைக் காட்டுவதற்காக **இரண்டு** முக்கிய விடயங்களை எழுதுக.

1. ..................................................................................................................................................

2. ..................................................................................................................................................

(01 புள்ளி)

*குறிப்பு :*

- இவ்வினாப்பத்திரத்தின் பகுதி I ஆனது மேற்காட்டியவாறான 08 (எட்டு) வினாக்களைக் கொண்டது.
- பகுதி I இன் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ஒரு வினாவுக்கு 05 புள்ளிகள் வீதம் எட்டு வினாக்களுக்கும் 40 புள்ளிகள் உரித்தாகும். (05 புள்ளிகள் x 8 = 40 புள்ளிகள்)

* *

*பக்கம் 3 ஐப் பார்க்க.*

© [සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ජාතික අධ්‍යාපන ආයතනය
විභාග දෙපාර්තමේන්තුව
தேசிய கல்வி நிறுவகம்
பரீட்சைகள் துறை
NATIONAL INSTITUTE OF EDUCATION
DEPARTMENT OF EXAMINATIONS
கல்வி இளமாணிப்பட்டம் (சிறப்பு) 2022/2025
முதலாம் மட்டம் பருவம I பரீட்சை - 2024

| BDD152 | மொழிக்கான அறிமுகம்<br>Introduction to Language |
|---|---|

மூல வகை வினாப்பத்திரம்

## பகுதி II

- **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01. மனித மொழி உற்பத்தித்திறன், இடப்பெயர்ச்சி ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ளது. அத்துடன் அது சமூக மரபுகள், கற்றல் ஆகியவற்றில் முழுமையாகத் தங்கியுள்ளது. இதன் சிக்கலான அமைப்பு, எந்தவொரு விலங்குத் தொடர்பாடல் முறைமையையும் விட மிகப் பரந்த வெளிப்பாட்டு எல்லைகளைக் கொண்டிருக்கும் வாய்ப்பையும் அளித்துள்ளது.

   (i) மனித மொழியினுடைய செயற்பாடுகள் **நான்கை** எழுதுக. (04 புள்ளிகள்)

   (ii) மொழியானது சமூக வாழ்வியலுடன் எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளது என்பதனை இரண்டாம் மொழி ஆசிரியர் என்ற வகையில் உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

   (iii) மொழியில் உற்பத்தித் திறன்களான பேச்சு மொழி, எழுத்து மொழிகளுக்கிடையில் உள்ள வேறுபாடுகளையும் அவை தொடர்பாடலில் பயன்படுத்தப்படுகின்ற போதான இலகு கடினத் தன்மைகளையும் வகுப்பறை அனுபவங்களுடன் உதாரணங்கள் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

02. தொடர்பாடல் என்பது ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு தகவலைக் கடத்துதல் ஆகும். இது பொதுவாக மொழியினூடாகவே நடைபெறுகின்றது. தகவல் தொடர்பாடலென்பது ஒரு மூலத்திலிருந்து மற்றொன்றுக்கு செய்தியை அனுப்புவதாகும்.

   (i) (அ) மொழியானது கடத்தப்படும் **இரண்டு** ஊடகங்களை எழுதுக. (01 புள்ளி)

   (ஆ) மேலே (i) இல் எழுதியுள்ள **ஒன்றினைத்** தெரிவு செய்து அதன் மூலம் மொழி கடத்தப்படும் செயன்முறையை விளக்குக. (02 புள்ளிகள்)

   (ii) மொழியினுடைய அமைப்பு தொடர்பாக ஒருவர் சிறந்த கரிசனை கொண்டிருக்க வேண்டும் என்ற கூற்றைச் சுருக்கமாக ஆராய்க. (04 புள்ளிகள்)



பக்கம் 4 ஐப் பார்க்க.

(iii) மொழியினூடாக கலாச்சாரமும் கலாசாரத்தினூடாக மொழியும் வளர்க்கப்படும்.

(அ) கலாசாரத்தினூடாக சமூகத்தில் மொழி வளர்க்கப்படும் சந்தர்ப்பங்கள் **மூன்றினை** எழுதுக. (03 புள்ளிகள்)

(ஆ) மொழிக்கும் கலாசாரத்திற்குமிடையில் உறவை வளர்ப்பதற்கு உமது இரண்டாம் மொழி வகுப்பறையில் நீர் மேற்கொள்ளும் செயன்முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

*குறிப்பு:*

- இவ்வினாப்பத்திரத்தின் பகுதி II ஆனது மேற்காட்டியவாறான 06 (ஆறு) வினாக்களைக் கொண்டது.
- பகுதி II இன் நான்கு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
- ஒவ்வொரு வினாவுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.
- பகுதி II இன் ஒரு வினாவுக்கு 15 புள்ளிகள் வீதம் நான்கு வினாக்களுக்கும் 60 புள்ளிகள் உரித்தாகும். (15 புள்ளிகள் x 4 = 60 புள்ளிகள்)

* * *